இந்தியா செல்பவர்கள்
தங்கள் தேர்வுக்கு
- மணிக்கூடுகள்
- டோர்ச் லைட்
- பாலுணவுகள்
- தேமஸ் பிளாஸ்க்
- பேனை
இன்னும் பல பொருட்களைப்
பெற நாடவேண்டிய
நல்ல ஸ்தாபனம்
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆவணி 24 ஷவ்வா: 5 இதழ்: 210
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-9-78

வெஸ்பா VESPA
உலகதரமிக்கது
இம்மாதம் முடிவில்
இறக்குமதியாகும்
ஸ்கூட்டர்களுக்கு
இன்றே பதிவு செய்யுங்கள்
எண்ணுக்கு ஏற்ற நிறம்...
மனதுக்கு ரம்மியம்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

# மாவட்ட மந்திரிகள் மாத இறுதியில் நியமனம்?

## சத்தியப்பிரமாணம் ஒக். 15க்கு முன்!

(கொழும்பு)

மாவட்ட அமைச்சர் நியமனம் இம்மாத இறுதியில் நடைபெறலாமென்று அறியப்படுகிறது. புதிய பிரதி அமைச்சர்களும் இம்மாத இறுதியிலேயே நியமிக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

புதிய அமைச்சரவையில் ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் இம்மாதம் 14ம் திகதி சபாநாயகர் பதவியை ராஜினுமாச் செய்து அமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவிஏற்பாரென்றும் அறியப்படுகிறது.

இதற்கிடையில் புதிய அரசியலமைப்புக்கு அரசாங்க ஊழியர்களும் மற்றும் நீதிபரி [illegible] விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு இறுதிக்கால எல்லையாக ஒக்டோபர் மாதம் 15ம் தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் அமைப்பு அமுலுக்கு வந்த [illegible] ஏழாந்தேதி வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் எல்லாம் அமைதியாக திட்டமிட்டபடி நடைபெற்றதாகவும் யாழ். கச்சேரியில் தேசியக்கொடியேற்றுவைபவத்[illegible] வேலைகள் நடைபெற்றதாகவும் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னுண்டோ தெரிவித்தார்.

## விமானப் பயணிகள் தகவல் தருக!

(கொழும்பு)

இரத்மலானை விமானநிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை தீப்பிடித்து எரிந்த விமானத்தில் பிரயாணம் செய்த பிரயாணிகளைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் இந்த விபத்து சம்பந்தமான விசாரணைகளுக்கு இது உதவியாக இருக்குமென்றும் கொழும்பு துப்பறியும் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. ஏ. நவரத்தினம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

## வடக்கில் மாலை 6 மணியுடன் பஸ்சேவைகள் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று சகல பஸ்சேவைகளும் மாலை 6 மணியுடன் ரத்துச்செய்யப்பட்டது.

அல்லைப்பிட்டிச் சந்திக்கு அருகாமையில் யாழ்ப்பாணடிப்போவைச் சேர்ந்த புதிய பஸ்வண்டி ஒன்று எரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று சகல பஸ்களிலும் சிவில் உடையில் ரகசியபொலிசார் சென்றதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பஸ்நிலையங்கள், ரயில்நிலையங்கள் ஆகியவற்றில் பொலிஸ் இராணுவ காவல் போடப்பட்டிருந்தது. முக்கிய சந்தி

[6-ம் பக்கம் பார்க்க]

## பஸ் தீவைப்பு: இருவர் றிவோல்வருடன் கைது!

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் போக்குவரத்துச்சபை பஸ் ஒன்று எரிக்கப்பட்டது தொடர்பாக இரு வாலிபர்களை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து ஒரு றிவோல்வரும், பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன

மேற்படி இரு வாலிபர்களும் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பஸ் கண்டக்டரதும் சாரதியினதும் வாக்குமூலங்களைப் பொலிசார் பதிவுசெய்துள்ளனர்.

பஸ்சாரதி தமது வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்; பிரயாணிகளை இறக்கிவிட்டு பஸ் திரும்பி வருகையில் யாழ்ப்பாணம் செல்வதற்காக இரு வாலிபர்கள் ஏறினர்கள், ஒருவர் றிவால்வருடன் சாரதி ஆசனத்துக்ககுகில் வந்தார். மற்றவர் கண்டக்டர் இருந்த இடத்துக்கு கத்தியுடன் சென்றுர். பஸ்ஸை நிறுத்தி இருவரையும் இழுத்து வெளியில் தள்ளினர்கள். அந்தசமயம் சைக்கிளில் ஒருவர் பெற்ருேல் ரின்னுடன் வந்து சேர்ந்தார். மூவரும் பஸ்ஸுக்குத் தீமூட்டிவிட்டு ஒரே சயிக்கிளில் ஏறி யாழ்ப்பாணப் பக்கமாக ஓடி மறைந்துவிட்டனர்.

இந்த வாக்குமூலத்தைஅடிப்படையாக வைத்து பொலிஸார் மேற்படி இருவாலிபர்களைக் கைதுசெய்ததாகத் தெரிகின்றது.

இவர்கள் இன்று அல்லது

[6-ம் பக்கம் பார்க்க]

## காலிமுக மைதானத்தில் தேசிய இசை நடன விழா

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்புத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளதைக் கொண்டாடுமுகமாக நேற்று மாலை காலிமுகமைதானத்தில் நடைபெற்ற தேசிய இசை-நடன விழாவில் 22 மாவட்டங்களிலிருந்தும் கலைஞர்களும் பாடசாலை மாணவர்களும்கலந்துகொண்டனர்.

பிரபல தமிழ், சிங்கள கலைஞர்கள் கலந்துகொண்ட இவ்வைபவத்தை லட்சக்கணக்கான மக்கள் பார்வையிட்டனர் என நமது நிருபர் தெரிவிக்கிறார்.

மாலை 4-20 மணிக்கு ஆரம்பமான இந்தநிகழ்ச்சியில் பிரதமர், ஜனதிபதி உட்பட அமைச்சர்களும் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவனியா, திருமலை

(6ம் பக்கம் பார்க்க)

## கண்டி - யாழ். பஸ்கொள்ளை: ஒருவர்கைது; 4பேர் தேடுதல்

(கிளிநொச்சி)

உமையாள்புரத்தில் அண்மையில் நடந்த கண்டி-யாழ். பஸ் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் ஆனைக்கோட்டையில் வைத்து ஆனைக்கோட்டைப் பொலிசாரினுல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 25 வயதுடைய வைத்திலிங்கம் சுந்தரலிங்கம் என்ற அந்த இளைஞர் கொடுத்த தகவலை அடுத்து கிளிநொச்சிப் பொலிசார்

[6-ம் பக்கம் பார்க்க]

உ
சிவமயம்

இன்று புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் காலயுத்தி வருடம் ஆவணி மாதம் 24-ந் திகதி (9-9-78) சனிக்கிழமை காலை 8-30 மணி முதல் 10-15 மணிவரை வரும் சுப முகூர்த்தவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெறும்

அன்னராஜா ஸ்ரோர்ஸ்

என்னும் ஸ்தாபனம். யாழ்ப்பாணம்

திரு. வெ. யோகேஸ்வரன்
பா. உ. அவர்களால்

திறந்துவைக்கப்படும். அத்தருணம் தாங்களும் சமுகந்தந்து பற்றுவரவு செய்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேம்

இவ்வண்ணம்
தங்கள் அன்புள்ள
அன்னராஜா ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்கள்.

158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

0278

## "இயக்கத்துக்கு களங்கம் ஏற்படுத்தவே தீவைப்பு"

### கூட்டணித் தலைவர் 'சிவா' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும். நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் விடுத்துள்ள செய்தி வருமாறு:

"நேற்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேண்டுகோளை ஏற்று, மாணவ மாணவிகள் கட்டுப்பாட்டுடனும், அமைதியாகவும் பாடசாலைகளைப் பகிஷ்கரித்ததை நன்றியுடன் வரவேற்கிறேம். அத்துடன் அவர்களுக்கு எமது பாராட்டுதல்களையும் தெரிவிக்கிறேம்.

"இந்தப் பகிஷ்கரிப்பின் புனிதத் தன்மையைக் கெடுப்பதற்காகச் சில விஷமிகள் இ. போ. ச. பஸ்ஸை எரித்ததாக அறிகிறேம்,

"இப்படியான நடவடிக்கைகள், எமது இயக்கத்திற்குக் களங்கம் ஏற்படுத்தவே மேற்

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்வதற்கு. கிளாக், போமன், லிப்ற் வேலையாள், கழுவுதல், பழகுபவர்கள் நற்சாட்சிப் பத்திரத்துடன் 15-9-78-க்கு முன் தபால் மூலம் அல்லது நேரில் விண்ணப்பிக்கவும். பரஸ்கோலுப்பிறிக்கேசன் சேவிஸ், முத்திரைச்சந்தை நல்லூர், யாழ்ப்பாணம். 0265

ஸ்ரான்லி வீதியிலுள்ள பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கு (கரியேஸ்) தேவை. வேலை பழகும் பொழுது சம்பளம் கொடுக்கப்படும். உடனடியாக நேரில் வரவும். 0257

அனுபவமுள்ள விற்பனை முகாமையாளர்கள் தேவை 15-9-78 க்குமுன் விண்ணப்பிக்கவும். Arul Bros & Co., Ltd, பண்டத்தரிப்பு. 0270

நேரகாலந் தவருது நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறும் ஆலயத்துக்கு பூசகர் உடனடியாகத் தேவை. தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும். விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். நேரடியாகவும் வரவும். தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: அறங்காவலர், கரைப்பிட்டி விநாயகர் ஆலயம், அராலி தெற்கு, அராலி. 0263

### தேவை

அனுபவமுள்ள ரிங்கர்/காஸ் வெல்டர், கார் பொடிகள், குளிர்சாதனப் பெட்டிகள், ரிங்கர் வேலைகள் செய்யக் கூடியவராயிருத்தல் வேண்டும் வயது 35—40: இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 15-9-78ந் திகதிக்கு முன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். மனேஜர், வாக்கர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். நேரடித் தொடர்புகள் ஏற்கப்படமாட்டாது. 0254

வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு நல்லூர் மருதனமடம், யாழ்நகர எல்லைக்குள் விரும்பத்தக்கது மின்சாரம், பைப் தண்ணீர் வசதி இருக்கவேண்டும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 0283 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 0283

யாழ்ப்பாண நகரில் புதிதாகத் திறக்கப்படவிருக்கும் ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் பணியாற்றுவதற்கு உதவியாளர்களாக மூன்று பெண்கள் தேவை. மருந்து விநியோகம் செய்வதற்கு சைக்கிள் வைத்துள்ள ஒரு ஆணும் தேவை. தொடர்பு; விளம்பர இல. 0287, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 0287

### விற்பனைக்கு

கார் Fiat 1100 நம். CY 5372 பிஸ்ரன் பிரமாணம் 20, செ. செல்வரத்தினம், காங்கேசன்துறை ரோட்டு, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 0277

புதிய மொடல் அக்காய் கசற் ரேடியோவும் பிறின்ஸ்ரர் (Three-in-one)வும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 76, அரசடி வீதி யாழ்ப்பாணம். 0271

### இனம்

செல்வச் சந்நிதி ஆலய முன்றலில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் அண்ணா தயாரிப்புக்களை வாங்கி இனம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில், தொலைபேசி: 7413. 0272

### பயிற்சி

3 மாத விசேட மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 12-09-78 ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு அதிபர், இன்ஸ்ரிரியூட் ஓவ் என்ஜினியரிங் ரெக்னெலெஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் 0285

## பின்னுறுதிக் கட்டளை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலம் சென்ற தம்பையா பொன்னையா என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினதும், உடமைப் பொருள்களினதும் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர்.
தம்பையா பொன்னையா
கைம்பெண் சரஸ்வதி,
மானிப்பாய்

மரணசாதன
நியாயாதிக்கம்:
இலக்கம். ரி. 3386.

மனுதார்.
தம்பையா செல்வராசா,
மானிப்பாய்.

எதிர்மனுதார்.

மேற்படி வழக்கு 1978-ம் வருடம் ஆனிமாதம் 16-ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. யோ. ஞா. ஆசிர்வாதம் அவர்கள் முன்னிலையில் மனுதார் சார்பில் சட்டத்தரணி திரு. எஸ். இராசேந்திரன் அவர்கள் சமுகமாக இருக்கவும் மனுதாரின் மனு, சத்தியக்கூற்று வாசிக்கப்பட்டது..

இதன் பிரகாரம் மேற்கூறிய இறந்தவரின் கைம் பெண்ணும் அவரது வாரிசும் ஆகிய மேற் சொல்லப்பட்ட மனுதாருக்கு பதல் தத்துவப் பத்திரம் வழங்கப்படல் வேண்டும் என இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பு வழங்கப்படுகின்றது.

மேலும் இது சம்பந்தமாக எதிர்ப்புக்காரணங்கள் யாதேனும் காட்ட இருப்பின் அவற்றுக்குப் போதிய அத்தாட்சிகளுடன் 1978-ம் வருடம் புரட்டாதி மாதம் 22-ம் திகதி அன்று காலை 10-00மணிக்கு முன்னர் காட்டப்படாவிட்டால் இவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை இத்தால் முழுமையான தீர்வையாக்கப்படும் எனவும் கட்டளையிட்டு விதிப்புவழங்கப்படுகின்றது.

1978-ம் வருடம் ஆனி மாதம் 16ம் திகதி-

சி. கனகரத்தினம்,
மாவட்டநீதிபதி,
யாழ்ப்பாணம்.

சி. இராசேந்திரன்,
மனுதார் சட்டத்தரணி.
0262

## ஸாம்பியா வேண்டுகோள்

லண்டன், செப். 8 ஸாம்பியாவின் கேந்திர ஸ்தானங்கள் மீது றொடேஷியா தாக்குதல் நடத்துவதை தடுத்து நிறுத்துமாறு ஸாம்பியா பிரிட்டனைக் கேட்டுக் கொண்டுள்ளது. (உ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ/இல/ஈடு/12658
நாகநாதர் ஆறுமுகம் பருத்தி அடைப்பு ஊர்காவற்றுறை —வழக்காளி

எதிராக

குழந்தை இராமநாதன், அனலைதீவு வடக்கு அனலைதீவு —எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றின் ஈட்டு வழ/இல/12658-ல் எனக்குக்கொடுபட்ட கட்டளைப்படி பின்வரும் இரண்டு துண்டுக்காணிகளையும் 1978ம் ஆண்டு (ஐப்பசி) ஒக்டோபர் 26ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் என்னுல் அக்காணிகளில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 3150/- 1971ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் திகதி தொடக்கம் 12-4-72வரைச்கும் ரூபா 1500/க்கு வரவேண்டிய வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 446/36 சதமும்.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலைதீவுக் கோவில்பற்று அனலைதீவு இறை- லிரியன் வளவு நில. பர. (6) ஆறும் பனைகள் வடலிகள், தென்னைகள், வேம்பு, கிணறும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு அம்பலவாணர் கைம்பெண் சின்னச்சியின் ஆதனமும் மறுபேரின் ஆதனமும், தெற்கு அரியபுத்திரன் நாகமணியின் ஆதனம் இதடங்கலும்,

(2) மேற்படி இறை "அறுகன் நடையும், உயரக்குளியும் நில. பர. (20) இருபதும் பனைகள் வடலிகள் வீடும். எல்லை கிழக்கு வான் வடக்கு ஒழுங்கை. மேற்கு குழந்தை கணபதியின் ஆதனம் தெற்கு கந்தர் சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் (1/2) அரைவாசி.

க. சரவணமுத்து
கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்
451, நாவலர் ரோட்
அரியாலை,
யாழ்ப்பாணம்.
13-9-78 0276

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பராயை சேர்ந்த சிவசுப்பிரமணியம் பத்மநாதன்.
இல: ஈடு 13861 வழக்காளி

எதிராக

சுந்தரம் மகள் கனகம்மா மணல்தரை ஒழுங்கை திருநெல்வேலி. எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் 13861-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும். துண்டுக்காணி 1978-ம் புரட்டாதி 13-ம் திகதி 1978-9-13 புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 5095-00 இதில் ரூபா 3000-00க்கும் 73-5-29 தொடக்கம் 75-11-24 வரைக்கும் 100 க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 485/05 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 275-15 நடைபெறவேண்டியசெலவு ரூபா 118-75 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 91-15) கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் யாழ்ப்பாணப் பிரிவு திருநெல்வேலி கோவிற்பற்று நல்லூர் இறையைச் சேர்ந்த செழியனூர் கோன்புலம் செழியனூர் கோன் மூத்தபினூர் புலம் இறைட்டைப் பறையடி பர. நில. 5 இலாச்சமும் 1½ குளி அதிகாரம்பெற்ற நில அளவையாளர் வ. தம்பு 13-3-1960ல் தயாரித்த இல: 990 படத்தில் 2 என அடையாளம் இடப்பட்டுள்ளது. இதில் இருந்து பிரிக்கப்பட்ட நிலபரப்பு 2½ இலாச்சம் அதில் அடங்கலுமுள்ள வான்பயிர் செய்பயிர்களும் குறிக்கப்பட்ட படத்தில் 3 என இலக்கம் இடப்பட்ட நிலப்பரப்பில் உள்ள கிணற்றில் பங்கும் குறிக்கப்பட்ட படத்தில் இலக்கம் 5 என குறிக்கப்பட்ட படத்தில் பொது கைஒழுங்கையில் பிரதான ஒழுங்கைக்கு போவதற்கான வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும். எல்லை கிழக்கு தில்லையம்பலம் சுவாமிநாதரின் ஆதனமும் வடக்கு செல்லத்துரை வைத்திலிங்கத்தின் ஆதனமும் மேற்கில் பொது கை ஒழுங்கையும் தெற்கில் மேற்கூறப்பட்ட காணியின் எஞ்சிய பகுதி செல்லத்துரை கனகரத்தினத்துக்குரியது.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும், & விலைமதிப்பாளரும்.
89, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 20-7-78. 0273

## நாட்டிய அரங்கேற்றம்

சதங்கை நர்த்தனலய மாணவி
செல்வி பற்றிசியா யோசவ்வின் நீக்கிலாப்பிள்ளையின்
பரதநாட்டிய அரங்கேற்றம்
16-9-78 சனிக்கிழமை மாலை
வீரசிங்கம் மண்டபத்தில்
**திரு. மு. சிவசிதம்பரம் பா. உ.**
தலைமையில். நடைபெறும்.
0255

வடமாநில கல்வித் திணைக்கள
## பொழுதுபோக்கு களரி
இன்று நடைபெறவிருந்த நிதியுதவிக் காட்சி
23-9-78க்கு பின் போடப்பட்டுள்ளது.
கு. ந. இராசநாயகம்,
செயலாளர்.
0282

## சில்லாலை ஆரோக்கியமாதா ஆலய அபிமானிகளுக்கு ஓர் அறிவித்தல்

அபிமானிகளே!

தவிர்க்கமுடியாத காரணங்களின் நிமித்தம் சில்லாலை ஆரோக்கியமாதா ஆலய கோபுரக் கட்டிட நிதிக்காக இழுக்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு மார்கழிமாதம் 25ந் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது. சிரமத்திற்கு மன்னிப்புக் கோருகின்றோம்.

காரியதரிசி,
ஆலய கட்டிட சபை
சில்லாலை
ஆரோக்கியமாதா ஆலயம்
0279

உரும்பராய்

## கருணாகரப்பிள்ளையார் ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மகோற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து இம் மாதம் 16 திகதி சனிக்கிழமை பிற்பகல் தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடைகிறது.

மகோற்சவ விசேட தினமான இன்று பகல் சங்காபிஷேகம் நடைபெறும். இரவு 8 மணிக்கு தலையால் நடந்த தலைவி என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெறுகின்றது..

நாளை பகல் விநாயகப் பெருமானுக்கு விபூதி அன்னம் அபிஷேகம் நடைபெறும் இரவு பண்ணிசைப் புலவர் திரு எஸ். ஆர். திருஞானசம்பந்தன் குழுவின் பண்ணிசை விருந்து நடைபெறும் திங்கட்கிழமை இரவு சங்கீதபூஷணம் மோகனாம்பிகை கணேசனின் சங்கீதக் கச்சேரியும் செவ்வாய்க்கிழமை கவிஞர் வி. கந்தவனத்தின் 'ஞானக்கொழுந்து' என்னும் உபந்நியாசமும் புதன்கிழமை இரவு ஆசிரிய பயிற்சி க்லாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத்தின் 'சைவம் வளர்த்த மங்கையர்கள்' என்னும் உபந்நியாசமும் நடைபெறவுள்ளன.

இம்மாதம் 14-ந் திகதி நடைபெறும் சப்பரத்திருவிழாவில் ஆசிரியர். திரு. செ. ஐயாத்துரையின் உபந்நியாசமும், திருப்பூங்குடி வி. கே ஆறுமுகத்தின் இன்னிசை வில்லிசையும் நடைபெறும் 15-ந் திகதி பிற்பகல் தேர்த் திருவிழாவும் 16-ந் திகதி பிற்பகல் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் மகோற்சவ தினங்களில் தினமும் 7 மணிக்கு சாயரக்ஷை திருவிழாவும் நாதஸ்வர இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன. (ஊ)

## 100வது தடவையாக 'தியாகச்சுடர்'

(அரியாலை)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ கிருஷ்ணலயா நாடக மன்றத்தின் தயாரிப்பான 'தியாகச்சுடர்' என்ற சமூக நாடகம் இன்று 100 வது தடவையாக யாழ். திறந்த வெளியரங்கில் மேடையேறுகிறது.

திருவாளர்கள் க. கிருஷ்ணராசா சு. சண்முகநாதன், வி. இராமசாமி, சி. குணரத்தினம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிருர்கள்.

இதுவரை வடமாகாணத்தில். நடைபெற்ற பல நாடகப் போட்டிகளில் போட்டியிட்டு 23 தங்கப்பதக்கங்களைப் பெற்று மிகவும் சிறந்த சமூக நாடகமாக இதுவிளங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கது. (உ)

ஈழநாடு
The Eelanaadu

## புதிய அமைச்சரவை

புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்தவுடன் புதிய அமைச்சரவையும் பதவியேற்றிருக்கிறது. புதிய அமைச்சரவையில் 26 பேர் அங்கம் வகிக்கின்றனர். அமைச்சரவை புதிதாக இருந்தாலும் இதில் அங்கம் வகிப்பவர்களில் பெரும்பாலானோர் பழைய அமைச்சர்கள்தான்.

முன்னைய அமைச்சரவையில் பிரதி அமைச்சராக இருந்த திரு. ரனில் விக்கிரமசிங்கா இளைஞர் அலுவல்கள் வேலைவாய்ப்பு அமைச்சராக நியமனம் பெற்றிருக்கிறார். சபாநாயகராக இருந்த திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்ராஜாங்க அமைச்சராகவும், திரு. தொண்டமான் கிராமியக் கைத்தொழில் அமைச்சராகவும் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

பழைய அமைச்சர்களே பெரும்பாலும் இடம் பெற்றிருந்தாலும் அமைச்சுக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு மாற்றம்.

கப்பல் உல்லாசப் பயணத்துறை அமைச்சராக இருந்த திருமதி விமலா கன்னங்கரா கிராம அபிவிருத்தி அமைச்சராகவும் புதிதாக நியமனம் பெற்றுள்ள திரு.எஸ்.தொண்டமான் கிராமிய கைத்தொழில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கிராமியக் கைத்தொழில் அமைச்சு இன்று மிகமுக்கியமும் அவசியத் தேவையுமாகும்.

கிராமியக் கைத்தொழில்கள் நமது நாட்டில் நிறைய உண்டு. ஆனாலும் இவற்றுக்குச் சரியான உதவியும் ஊக்கமும் அளிக்கப்படாததால் அவை வளர்ச்சியடைய முடியாத நிலையிலிருக்கின்றன.

திரு.தொண்டமான் கிராமப்புறங்களையும் அங்குள்ள மூலவளங்களையும் நன்கு அறிந்தவர். கிராமியக் கைத்தொழில்களையும் நன்கு தெரிந்தவர். தமது கிராமியக் கைத்தொழில் பொருள்களுக்கு வெளிநாடுகளிலுள்ள மதிப்பையும் அறிந்திருப்பவர். இதனால் பொருத்தமான அமைச்சு அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கிராமியக் கைத்தொழில் வளர்ச்சியடையுமென்று எதிர்பார்க்கலாம்.

இளைஞர் அலுவல்கள், வேலைவாய்ப்பு ஆகிய வற்றுக்கென தனியாக ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது.

நமது நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றிலுமே இளைஞர் பிரச்னையும் வேலைவாய்ப்புப் பிரச்னையும் பூதம்போல் வளர்ந்துள்ளது. இது சுலபமான பிரச்னையுமல்ல.


இளைஞர்களின் குறைகளை ஆராய்ந்து அவர்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய முறையில் தீர்வு காண்பதென்பது சர்தாரண விஷயமல்ல. இது உடனடியாகவே செய்து முடிக்கக் கூடிய வேலையுமல்ல.

ஆனாலும் அரசத்துறைகளிலும் தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை அரசு தீட்டிவரும் இச்சமயத்தில் இளைஞர் அலுவல்களுக்கும் வேலைவாய்ப்புக்குமென தனியாக ஓர் அமைச்சரை நியமித்திருப்பது பல விதத்திலும் பயனளிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

இளைஞர் பிரச்னை ஒரு சமூகத்தினதோ கட்சியினதோ பிரச்னையல்ல. இது ஒரு தேசியப் பிரச்னை. புதிய அமைச்சர் இதைத் தேசிய ரீதியில் அணுகி தீர்வுகாண முயற்சிப்பாரென்று நம்புவோம்.

# சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் உயர்தனிப் பெருமை

-- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை D. Litt. --



திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் இளைய குமாரர், ஒரே ஒரு குமாரர். மூத்த பிள்ளைகள் பெண்பிள்ளைகள் அவர்களுள் மகேசுவரிதேவி என்ற பெண்ணைத்தான் தெரியும், மிக மிக நெருங்கிய பழக்கம் உண்டு. இளமையில் மகேசுவரிதேவியே என்னை வளர்த்தார் என்று சொல்லலாம். மகேசுவரியின் கணவர் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள். உரையாசிரியர் எனக்குப் பாட்டன் முறையினர். 'இந்துசாதன' பத்திராசிரியராயிருந்த திரு. திருஞான சம்பந்தர் முதலிய ஐவர் உரையாசிரியரின் புதல்வர்கள் திரு. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு மருமக்கள்.

'கல்லாமற் பாதிகுலவித்தை' சமயமும் தமிழும் குடும்பச் சொத்தாய், பெரியார் அவர்களுக்கு இளம்பருவத்திலேயே உதிரத்தில் கலந்து ஊற்றெடுக்கத் தொடங்கிவிட்டன. கந்தபுராணம் என்னுல் உள்ளங்காலிலிருந்து உச்சி வரை பெரியாருக்கு உருகும். கந்தபுராணம் சைவசித்தாந்த பொக்கிஷம் என்பது பெரியார் கருத்து.

அக்காலத்தில் 'பிராமணரல்லாதாருக்குக் கணிதம் வராது' என்ற திடநம்பிக்கை அங்கேயிருந்தது. பெரியார் அந்நம்பிக்கைக்குமுற்றுப்புள்ளி வைத்துக் கணிதத்தில் மிகத் திறமையோடு பி. ஏ. பரீட்சையிற் சித்தியெய்தினர். தர்க்கம் அகநூல் அவருக்குக் கைவந்தவை. பட்டதாரியான போது மிக இளம் வயசாயிருந்தும் அவரது ஆங்கிலப் படிப்பு ஆங்கில நாகரிகத்தை எட்டியும் பார்க்கவில்லை.

ஒல்லியான - தேகம் - குடுமி - மடித்துக் கட்டிய எட்டுமுழ வேட்டி - காற்சட்டை, சப்பாத்து, செருப்பு அவர் கால்கள் அறியாதவை - சட்டை தரிப்பது மிக அருமை. சிறிய அங்கவஸ்திரம் - மிதியடி - இவ்வாறு காட்சியளித்தார் இளைஞர் திரு. சு. சிவபாதசுந்தரம்.

பெரியாரின் சமயவாழ்க்கை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உப அதிபராயும், அதிபராயும் இருந்த காலத்தில் உச்சநிலை எய்தியது.

பெரியார் எழுதிய முதலாம் சைவ போதத்துக்கு, சேர். பொன். இராமநாதன்துரை ஒவ்வொரு பாடத்தையும் ஆராய்ந்து விரிந்த முன்னுரை வழங்கியிருக்கின்றார். இரண்டாம் மூன்றும் சைவ போதங்களும் சைவக்கிரியை விளக்கமும் ஆங்கிலத்தில் எழுதிய சைவசித்தாந்தமும் அருமையானவை. பெரியாரின்பேச்சு தனித்துவமானது.

புலோலியூர் சைவப் பெரியார் சு. சிவபாத சுந்தரனார் நூற்றாண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வியரிசையாக நடைபெறுவதை யொட்டி இக்கட்டுரை வெளியாகின்றது.

ஒருமுறை சைவமகாநாடொன்றில் பெரியார் அவர்கள் தலைமை வகித்து ஒவ்வொருவர் பேச்சுக்கும் வழங்கிய குறிப்புரை பேசியவர்களையும் சபையையும் பிரமிக்கச் செய்தது. உண்மையில் பிரசங்கம் முழுவதும் பெரியாரின் பிரசங்கமாகவே இருந்தது. ஆயினும், பேசியவர்கள் தம்மைப் பெருமைப் படுத்திக்கொள்ளத்தக்க வகையிலும் இருந்தது ஒரு தனிச் சிறப்பு.

தென்மராட்சியில் பெரியார் அவர்கள் பேசுமிடங்களில் பிரசித்திபெற்ற சின்னத்தம்பி போதகரும் அதிபர் ஆபிரகாமும் பயபக்தியுடன் முன் வரிசையிலிருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது.

பெரியார் அவர்களின் வாழ்க்கை சமயவாழ்க்கை. அவர்களின் ஒவ்வொரு மூச்சும் சைவசித்தாந்த மூச்சு.

# இலக்கிய மாமுனி டால்ஸ்டாய்

''டால்ஸ்டாயிடம் எந்த அளவு திறமை வாய்த்திருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது, ''ஓ, மனிதர்களே! எம் மத்தியில் எத்தகைய ஒரு மகத்தான மனிதர் வாழ்கின்றார் என்பதைப் பாருங்கள்?'' என்று ஓங்கிய குரலில் கத்தத்தோன்றுகிறது!''

—கார்க்கி

லியோ டால்ஸ்டாய்- இலக்கியத்தைப் பற்றி அறிந்த எவரும் மறக்கமுடியாத நாமம் இது!

தமது இலக்கியப் பிற்சந்ததியினருக்கு செழுமிய - விழுமிய கலாமுதிசத்தை விட்டேகிச் சென்ற சிருஷ்டிச் செல்வர்களில் இவர் முக்கியமானவர்; முதன்மையானவர்

1828, செப்டம்பர் பணச் செழிப்புள்ள ஒரு குடும்பத்தில் பிறந்த டால்ஸ்டாய் பால்யப் பருவத்திலேயே அனாதையானவர். தமது உறவினரின் அரவணைப்பில் வளர்ந்த இவர், தமது இளவயதினைக் கேளிக்கைகளிலேயேகழித்தவர். ஆனால் தனது வாழ்வின் அர்த்தமற்ற தன்மையினைப் புரிந்துகொள்ள இவர் தலைப்பட்ட தருணத்தில்- அடுத்தவரின், அனாதையரின் பஞ்சமும் பட்டினியும் மிக்க வாழ்வு இவர் மனதினை உறுத்தத்தலைப்பட்ட தருணத்தில் தான்- ''நான் ஒரு குற்றவாளி!'' என்ற கசப்பான வார்த்தைகள் இவரையும் அறியாது இவரது இதயத்திலிருந்து பீறிட்டெழுந்தது.

ச. சுபோதினி

டால்ஸ்டாய் தன்னுள் ஏற்பட்ட மனமாற்றம் பற்றி ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார். ''பலகாலமாக என் மனதுள் மூடடங்கிக்கொண்டிருந்த ஒரு பெரும் ஜுவாலையாகப் பற்றியெரிய ஆரம்பித்தது. எனது வர்க்கத்தினரின் வாழ்க்கை அர்த்தமற்றது என்று கண்டுபிடித்தேன். உழைக்கின்ற பாடுபடுகின்ற மக்களின் வாழ்வில் ஒரு நிறைவான அர்த்தம் இருப்பதை நான் கண்டு கொண்டேன்!''

டால்ஸ்டாயின் முதலாவது படைப்புகளான 'சிறுவயது' 'பால்யபராயம்', 'வாலிப பராயம்' ஆகிய முத்தொடர் சுயசரிதக்கதைகளில் இவரது மனப் போராட்டங்கள் பல கோணங்களில் வெளிப்படக்காணலாம். அக்காலகட்டத்தில் பிரபல்ய ரஷ்ய எழுத்தாளர்களான நெக்கிரசோவ், செர்னிசேவ்ஸ்க்கி, தொப்ரோலியுபோவ் ஆகிய எழுத்தாளர்கள்கூட டால்ஸ்டாயின் இந்த முதல் இலக்கிய முயற்சியை வெகுவாகப் பாராட்டியிருந்தனர்.

இந்த நிகழ்ச்சியுடன் ருஷ்யாவில் ஒரு பெரும் எழுத்தாளர் பிறந்துகொண்டிருந்தார்.

1851ல் தாம் வாழுகின்ற வாழ்வினிற் சலிப்புற்ற டால்ஸ்டாய் கோகேசஸ் சென்று இராணுவத்திற் சேர்ந்து கொண்டார். இவர் இராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் தான் ''எல்லைக்காரன் குறிப்புகள்'', ''மரம் வெட்டிகள்'' ஆகிய கதைகளை இவர் எழுதினார். யுத்த காலத்தில் அதனது கொடிய துன்பங்களையும் உற்பாதங்களையும் நிதர்சனமாகக் கண்ட டால்ஸ்டாயின் மனதில் யுத்தத்தின் கொடுமையையும் சமாதானத்தின் இன்றியமையாமையினையும் உலகினுக்குச் சித்தரிக்கும் நவீனம் ஒன்றினைப் புனையவேண்டும்என்ற எண்ணம் துளிர்விட்டது.

யுத்தத்துக்குப் பின்னர் முழுநேர எழுத்தாளராக மாறிய டால்ஸ்டாயின் ஆறுஆண்டுகால தீவிர உழைப்பில் தான் உலகப் புகழ்பெற்ற ''போரும் சமாதானமும்'' நாவல் உருவாகியது.

வறிய விவசாயிகளை நிலச்சுவான்தார்களிடமிருந்து விடுதலை பெறச் செய்வதற்கும் மக்கள் மனங்களில் அறிவு வெளிச்சத்தைப் பாய்ச்சுவதற்கும், பல சமூக மாற்றங்களை ஏற்படுத்தவும் டால்ஸ்டாய் அதமார்த்தமாக விரும்பினாரெனினும், அவற்றை நிறைவேற்றுவதற்கு அவர் புரட்சியை ஒரு சாதனமாக ஏற்றுக்கொள்ளவில்லை. தனி மனிதன் தான் மீது ஏற்படும் சுய-சீர்மைப்பாடே சமுதாய மறுமலர்ச்சிக்கு உதவும் என்று அவர் நம்பினார்.

1980களின் இறுதிப் பகுதியில் டால்ஸ்டாய் தம்மைப் பொதுப்பணிகளில் முழுது

[5-ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

அகங்காரம் அறியாமையால் எழுகின்றது; ஞானம் உள்ள இடத்தில் அகங்காரம் இல்லை. மமதை அகன்றவன் உண்மையைக் காண்கிறான். —யங்

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 24-ந் திகதி
சனிக்கிழமை
(9-9-78)

**மேடம்:-** சிந்தனைகளின் தாக்குதல் உங்களை சிந்திக்க வைக்கும், வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு, அரசபயத்திற்கும் இடமுண்டு, அமைதி நன்று.

**இடபம்:-** பெண்களுடனை தொடர்புகள் பெருகும், பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல்கணை தாக்கும், சுவர்ச்சிப் பொருட்களில் அதிக அர்வம் ஏற்படும். மனநிறைவும் ஏற்படும்.

**மிதுனம்:** இல்லலின் பின்னலால் இதயபாரம் அதிகரிக்கும், முதியவர் ஒருவரின் உடல்நலம் கவலையைத் தரலாம், பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும், தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

**கடகம்:-** புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும், ஏழைகளுக்கு இரங்குவதில் முன்னிற்பீர்கள், தெய்வகுருபக்திக்கும் இடமுண்டு, மற்றவர் உங்களை பின்பற்றக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

**சிங்கம்:-** பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வும் கிடைக்கலாம், சிலருக்கு புதிதாகவும் தொழில் கிடைக்கக் கூடும், சிலர் வாழ்க்கையில் பயணமும் மேற்கொள்ளப்படலாம், வெளியிடத் தொடர்புகள் வளர்வதற்குமிடமுண்டு.

**கன்னி:-** புதிய கோணத்தில் இருந்து பொருள் வரவிற்கு இடம் உண்டு, துணிவையே துணையாகக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள், பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடி வரும்.

**துலாம்:-** திருடர் பயத்திற்கு இடமுண்டு, தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும், தானியநஷ்டத்திற்கிடமுண்டு, பிணிக்கு இடங்கொடாது இருப்பதுடன் பொறுமையையும் பேணவும்.

**விருச்சிகம்:-** குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள், சிறு விடயத்திற்குக் கூட மற்றவர்கள் குறைகூறுவார்கள், வாதரோகத்திற்கு இடமளியாது சுகாதாரமாக நடந்துகொள்ளவும், சுமாரான தினம்.

**தனுசு:-** கன்னல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், தாக்க மனப்பான்மை உருவாகும், பொருள் வரவிற்கும் இடமேற்படலாம், சிறப்பான தினம்.

**மகரம்:-** துஷ்டர்கள் உறவு உங்களை சங்கடத்தில் மாட்டிவைக்கும், பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு, வழக்கு வியகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளவும், உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

**கும்பம்:-** சொல்வனவுகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் தென்படும், வியாபாரத் துறையிலும் முன்னேற்றத்திற்கிடமுண்டு.

**மீனம்:-** நினைத்ததை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள், பல வாழ்க்கையில் காதல்விவகாரங்களுக்கு இடமேற்படலாம் குடும்ப பகுதியில் இணைப்புகள் பலப்படும், பொதுவாக நல்ல நாள்.

சோதிடகலாநிதி
இணுவில் க. வேலுப்பிள்ளை

# "பொதுத்தேர்தலை உடன் நடத்தும் எண்ணம் இல்லை"

## பிரிட்டிஷ் பிரதமர் அறிவிப்பு

லண்டன், செப். 8

'பொதுத் தேர்தலை உடனடியாக நடத்தும் எண்ணம் எனக்கு இல்லை'

இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் அறிவித்துள்ளார்.

தொலைக்காட்சியில் காட்சியளித்த அவர் மேலும் இது பற்றிக் கூறியதாவது: 'நாட்டில் பணவீக்கத்தைக்குறைத்து பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்துவதே எனது தீவிர முயற்சியாகும். பொதுத் தேர்தலை உடனடியாக நடத்தும் எண்ணம் எனக்கில்லை' பிரதிநிதிகள் சபையில் தொழிற்கட்சி நெருக்கடிகளை எதிர்நோக்குகின்ற போதிலும் அவற்றை சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை தமக்குண்டென்றும் பிரதமர் சொன்னார்.

எதிர்க்கட்சிக்கு சபையில் 319 ஸ்தானங்கள் தற்போது உள்ளன.

ஆளும்கட்சிக்கு கூட்டுக் கட்சிகளுடன் சேர்த்து 309 ஸ்தானங்கள் உள்ளன. பிரதமர் கலகனின் பொதுத்தேர்தலை இப்போது நடத்தும் எண்ணம் தமக்கில்லை என்ற அறிவிப்பு தமக்கு ஆச்சரியத்தை விளைவிப்பதாக லிபரல் கட்சித் தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரதமரின் இவ்வறிவிப்பு நாட்டு நலனுக்குகந்ததாக இல்லை என்று கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவி திருமதி தாச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் இம்மாத பிற்பகுதியில் நடைபெறும் என பலமாக பேசிக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ)

## நிலைமை சீராகிறது

புதுடில்லி, செப் 8

புதுடில்லியிலும் சுற்றுவட்டாரங்களிலும் வெள்ளம் தணிந்து நிலைமை சீராகிவருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

# "தேனீ வளர்ப்பில் ஈடுபடுங்கள்!"

## பருத்தித்துறை எம். பி. ஆலோசனை

(உடுப்பிட்டி)

'படித்தவாலிபர்களும்இளம் பெண்களும் தேனீ வளர்ப்பில் ஈடுபடவேண்டும்.' என்று பருத்தித்துறை எம்.பி. திரு துரைரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேனீ வளர்ப்பு ஒரு சிறந்த குடிசைக் கைத்தொழிலாக விளங்குவதால் சிறிய அளவிலான தேனீப் பண்ணையை வீடுகளிலேயே வைத்திருக்கலாம் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட விவசாயப்பகுதியினர் தேனீ வளர்ப்பில் ஈடுபடுவோருக்கு வேண்டிய உதவிகளை வழங்கத் தயாராக உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அமைச்சரவை

(கொழும்பு)

இருபத்தைந்து அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை நேற்று முன்தினம் பதவியேற்றது. தற்போழுது வெளிநாட்டிலிருக்கும் திரு. வின்சென்ட் பெரேராவும், திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸும் பின்னர் அமைச்சர்களாகப் பதவியேற்பார்கள் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தவிர இரண்டு புதிய முகங்களும் (திரு. எஸ். தொண்டமான், திரு ரணில் விக்கிரமசிங்கா) அமைச்சரவையில் இப்போழுது இடம்பெற்றுள்ளனர்.

அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள சிறிய மாற்றங்களுடன் கூடிய புதிய அமைச்சர்களும் அவர்கள் வகிக்கும் அமைச்சுக்களும் வருமாறு:

* ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன — பாதுகாப்பு, திட்ட அமுலாக்கல்.
* பிரதமர்: ஆர். பிரேமதாசா — வீடமைப்பு கட்டட நிர்மாண, உள்ளூராட்சி.
* மேஜர் மொன்டேகு ஜயவிக்ரமா — பொது நிர்வாக, உள்நாட்டு.
* திரு. எம். டி. எச். ஜயவர்த்தன — தோட்டக் கைத்தொழில்.
* திரு. அசோகா கருணரத்ன — சமூகசேவைகள்
* திரு. ஈ. எல். பி. ஹுருள்ளே — கலாச்சார விவகாரம்.
* ஜனுப் எம். எச். மொகமட் — போக்கு வரத்து
* திரு. ஈ. எல். சேனநாயக்கா — விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி.
* திருமதி விமலா கன்னங்கரா — கிராம அபிவிருத்தி.
* காப்டன் சி. பி. ஜே. செனிவரத்ன — தொழில்
* திரு. காமினி ஜயசூரியா — சுகாதாரம்.
* திரு. ஷெல்டன் ஜயசிங்கா — தபால் தகவல் தொடர்பு.
* திரு. விஜேயபால மெண்டிஸ் — புடவைக் கைத்தொழில்.
* ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் — வெளி விவகாரம்.
* திரு. கே. டபிள்யு. தேவநாயகம் — நீதி.
* திரு. எஸ். பி. ஹேரத் — உணவு, கூட்டுறவு.
* திரு. சிறில் மத்தியூ — கைத்தொழில், விஞ்ஞானம்.
* திரு. டி. பி. விஜேயதுங்கா — மின்சக்தி, நெடுஞ்சாலைகள்.
* திரு. ரொனி டி மெல் — நிதி, திட்டமிடல்.
* திரு. காமினி திஸநாயக்கா — காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி.
* திரு. லலித் அத்துலத் முதலி — வர்த்தகம், கப்பல் துறை.
* திரு. நிஸங்கா விஜேயரத்ன — கல்வி, உயர் தரக் கல்வி.
* திரு. பெஸ்டஸ் பெரேரா — மீன்பிடி.
* திரு. எஸ். தொண்டமான் — கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி.
* திரு. ரணில் விக்கிரமசிங்க — இளைஞர் விவகாரம், வேலைவாய்ப்பு.

ஜோர்தானின் மேற்குக்கரை:

# சதாத், பெகின் தம்நிலைவிளக்கினர்

மேரிலண்ட், செப். 8

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக தத்தம் கருத்துக்களை இஸ்ரேலிய, எகிப்தியத் தலைவர்கள் கேம்ப் டேவிட் உச்சிமாநாட்டில் விளக்கிக் கூறினர்.

ஜோர்தானின் மேற்குக் கரையோரம் சம்பந்தமான தமது நிலையை இரு தலைவர்களும் ஆணித்தரமாக தெரிவித்தனர்.

நேற்று அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் உட்பட முத்தலைவர்களினதும் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. (உ)

## யாழ்ப்பாண வீதிகள் செப்பனிடும் வேலை துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள சில பழுதடைந்த வீதிகள், பெருந் தெருக்கள் நெடுஞ்சாலைத்திணைக் களத்தினால் செப்பனிடப்பட்டு வருகிறது.

யாழ். மாவிப்பாய் காரைநகர் வீதி, அரசடி சந்திவீதி, ஓட்டுமடச்சந்திவீதி, காங்கேசன்துறை வீதியிலுள்ள 4ம் கட்டைவரை, ஆரியகுளம் சந்தி, குட்செட்வீதிஆகியவை செப்பனிடப்பட்டுள்ளது. ஓட்டுமடம் டிப்போவைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. சிதம்பரநாதன், மேற்பார்வையாளர் திரு. எஸ். சந்திரசேகரம், உதவி மேற்பார்வையாளர் திரு. எம். சி. இரத்தினராசா ஆகியோரின் முயற்சியினால் இவ்வேலைகள் துரிதமாக முடிவடைந்தது. நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. செல்வரத்தினம் தலைமையில் இவ்வேலைகள் நடைபெற்றன. (க)

## ஏழாலை கி. அ. ச. வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் ஏழாலை மகாவித்தியாலய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குமாரசுவாமி, ஏழாலை கிராமசபை விசேட ஆணையாளர் திரு. எம். இராசரத்தினம், ஏழாலை கிராம சேவையாளர் திரு. சி. சச்சிதானந்தம், திரு. சி. அருச்சுனன் திரு. மு. சின்னத்தம்பி உட்பட மற்றும் பலர் இக்கூட்டத்தில் பேசுவர். (உ)

## தினமும் இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழாநேற்று ஆரம்பமானது. திருவிழா இசைநிகழ்ச்சிகள் இம் மாதம் 19 தேதிவரை தினமும்நடைபெறும். [க]

## "வெற்றியால் தன்னிலை மறத்தலாகாது"

(ஊரெழு)

"விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி தோல்வி ஏற்படுவது சகஜம் வெற்றியினுல் தன்னிலை மறத்தலோ தோல்வியினுல் மனந்தளர்தலோ கூடாது".

இவ்வாறு காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் சுப்பிறின்டன்ட் திரு. நிமால்சில்வா புன்னாலைக்கட்டுவன் 'பறக்கும் கழுகுகள்' விளையாட்டுக்கழகம் நடத்திய சுரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர்தமது உரையில் படைவிரர்களும் ஏனைய கழகவீரர்களும் இப்போட்டியில் பங்குபற்றியது பாராட்டு தற்குரியது என்றார்.

மேற்படி சுரபந்தாட்ட இறுதிப்போட்டியில் (செற்அப்போட்டி) மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தினர் காரைநகர் கடற்படை விளையாட்டுக் கழகத்தினருடன் மோதி பொழுது 2: 1 என்ற விகிதத்தில் வெற்றிபெற்றனர்.

ஒவர்கேம் போட்டியில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினர் இமையாணன் கலைமகள் விளையாட்டுக்கழகத்தினருடன் மோதிய பொழுது 2-1 என்ற விகிதத்தில் வெற்றி பெற்றனர். புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் கோவிலின் வீதியில் விசேடமாக அமைக்கப்பட்ட மைதானத்தில் தொடர்ந்து பத்து நாட்களாக இரவில் மின்னொளியில் சுரபந்தாட்ட விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. [உ]

## "இஸ்லாமிய சமூகத்திற்கான தொண்டு"

(யாழ்ப்பாணம்)

"நமது சமூகத்திற்கு இத்தகைய நூல்கள் செய்யும் தொண்டு பாராட்டப்பட வேண்டியது, இஸ்லாமிய அடிப்படையில் வாழ்வதற்குரிய கட்டுரைகளை இந்நூல் தாங்கி வந்திருப்பது வரவேற்கத்தக்கது"

இவ்வாறு யாழ். மீரானியாக் கல்லூரியில் அல்ஹாஜ் எம். ஐ. மீரான் முகிதீன் தலைமையில் நடைபெற்ற "அல்-ஈமான்" நூல் வெளியீட்டு விழாவில் சங்கைக்குரிய மௌலானா பேசுகையில் கூறினார்.

யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரனும் இவ்விழாவில் கலந்து கொண்டு முதற்பிரதியை வாங்கினர் மீரானியாக் கல்லூரி அதிபர் மௌலவி ஒ. எம். ஏ. நூலக ஆய்வுரை நிகழ்த்தினர்.

"இச் சஞ்சிகையில் வெளியாகியுள்ள கட்டுரைகள் நம் சமூகத்திற்குத் தேவையான நல்ல விடங்களைக் கொண்டுள்ளன. இந் நூலில் சிறு குறைகள் காணப்படினும் நிறைவான, நேர்த்தியான விடயங்கள் பல உண்டு" என ஆய்வுரையில் இவர் கூறினர்.

இறுதியில் நூலாசிரியர் ஜனுப் ஏ. சி. எம். மன்ஹூர் நன்றியுரை நிகழ்த்தினர். (உ)

# "வறுமையை ஒழிக்க அரசு திட்டம் தயாரிக்கிறது"

## -- மத்திய மந்திரி பி. இராமச்சந்திரன்

சென்னை, செப். 8

"மத்தியில் உள்ள ஜனதா அரசு நாட்டில் வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க திட்டங்கள் தயாரித்துவருகிறது"

இவ்வாறு மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரன் வேலூரில் நடைபெற்ற காமராஜர் சிலை திறப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

இச்சிலை உள்ளூர் ஜனதாக் கட்சியினரால் அமைக்கப்பட்டிருந்தது.

அமைச்சர் மேலும் தமது உரையில் மத்திய அரசின் மும்மொழித் திட்டத்தையும் ஆதரித்துப் பேசினர்.

காமராஜரின் குணுதிசயங்கள் குறித்து அமைச்சர் பாராட்டினர். (உ)

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Friday Foster

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன் - ஜெயலலிதா
சூரியகாந்தி

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர் - சாவித்திரி
ஜக்கம்மா

## வல்வெட்டி வளர்மதி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி வளர்மதி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் 14 ஆவது ஆண்டுவிழாவும் வருடாந்த விளையாட்டுப்போட்டியும் இம்மாதம் 23 ம், 24ம் திகதிகளில் நடைபெறும்.

முதலாம் நாள் பார்வையாளருக்ககான நிகழ்ச்சிகளாக 1 மைல் ஓட்டம் கழகஅஞ்சல் ஓட்டம், தேங்காய் உரித்தல், மற்றும் பெண்களுக்கான சங்கீதக்கதிரை. தேங்காய்துருவுதல், ஆகியன இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக நாடகப்போட்டியும்பரிசளிப்பும்நடைபெறும். (உ)

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642.
தினசரி 10-30., 2-15, 6-15, 10-00
ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
சந்திரலேகா
(புத்தம் புதிய பிரதி)
நிதியுதவிக்காட்சி 9-9-78 காலை 2 30 காட்சி மட்டும்
குங்குமம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்டாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் - தேவிகா
நடித்த
சாந்தி

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-விஜயகுமார்
ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு
(புதிய பிரதி)

REGAL Jaffna 5th&LASTCROWDEDWEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆடவந்த தெய்வம்
12-9-78 முதல்
இது சத்தியம்

லிடோ (யாழ்.நகர் போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி-தேவிகா
குலமகள் ராதை
11-9-78 முதல்
ஸ்ரீ வள்ளி

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

அராலி சிழக்கு யாழ். சன சமூக நிலையத்தின் 12-வது ஆண்டுவிழா இன்று மாலை சனசமூகநிலையத்தில் நிலையத் தலைவர் திரு. மா. சின்னத்துரை தலைமையில் நடைபெறுகின்றது. இவ்விழாவின் பிரதம விருந்தினராக யாழ். எம் பி திரு வெ. யோகேஸ்வரன் கலந்து கொள்வார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. மு சுப்பிரமணியம். சங்கானை கிராம அபிவிருத்திஅதிகாரி திரு. வி. சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட பலர் இவ்வாண்டுவிழாவில் உரை நிகழ்த்துவர் 'வசந்தபுரிமைந்தன்' 'ஏழைகள் தோழன்',. 'குரல்வளை' 'எதிர்பாரராரது' ஆகிய நாடகங்களும் இவ்விழாவில் இடம் பெறும். [ஊ[

## சோமாஸ்கந்த பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி நிறுவியவர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

## பரி.யோவான் வெற்றி

[அரியாலை]

ஸ்ரீலங்கா கூடைப் பந்தாட்டச்சங்கத்தினுதரவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியும் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் கலந்து கொண்டன. போட்டி ஆரம்பமுதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருநத போதிலும் பரி. யோவான் கல்லூரிக்கோஷ்டி 50 : 40 புள்ளிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரிக் கோஷ்டியைத் தோற்கடித்து வெற்றி பெற்றது.

## இலக்கிய...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முழுதாக ஈடுபடுத்தியிருந்தார். ஓய்வொழிச்சலின்றி கட்டுரைகளையும் கதைகளையும் எழுதினார். நியாயத்திற்கும் கருணைக்குமாகக் குரலெழுப்பினார், அவரது குரல் உலகெங்கும் ஒலித்தது. (இந்தியாவின் விடுதலைக்காகக் கூட டால்ஸ்டாய் தீவிரமாக இயக்கம் நடாத்தியமையையும் இங்கு நினைவு கூருவது பொருத்தமானது.) யுத்தத்துக்கு எதிராகவும் உலக மக்கள் மத்தியிலான நட்புறவுக்குமாகப் பிரசாரஞ்செய்தார். தார்மீக ரீதியில் பக்குவம் பெறுமாறு மக்களை வேண்டினார். சுருங்கக் கூறின் அவர் தமது காலத்தின் மனச்சாட்சியாகத் திகழ்ந்தார்.

டால்ஸ்டாய் தமது இறுதிக் காலத்தில், அதாவது அவரது 82வது வயதில், தான்வாழ்ந்த சூழலிலிருந்து வெளியேறி மக்களுக்கு உபதேசஞ்செய்யும் பொருட்டு தேசாந்திரியாகச் செல்லப்புறப்பட்டார். இப் பயணத்தின்போது, 1910 நவம்பர் 10ந் திகதி அஸ்டாபோவோ என்ற ரயில் நிலையத்தில் சன்னி நோயால் பிணிக்கப்பட்டு டால்ஸ்டாய் இறந்தார்.

மக்களுக்குச் சேவை செய்வதில் தனது வாழ்க்கையின் அர்த்தத்தை டால்ஸ்டாய் கண்டார். வரலாறும் மக்களும் மறக்காது அவருக்கு சிரஞ்சீவித்துவத்தை அளித்துள்ளன.

# நீர்பாய்ச்சுவதில் நவீன முறை

### விவசாய ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடிப்பு

(உடுப்பிட்டி)

பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதில் நவீன முறையொன்றைத் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்துள்ளது.

நீர்இறைக்கும் போது வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களுக்கு ஒரு பாத்திவிட்டு அடுத்த பாத்திக்கு நீர்பாய்ச்சுவதே திருநெல்வேலி விவசாய ஆராச்சி நிலையம் கண்டு பிடித்த நவீன முறையாகும்.

இப்புதிய முறையால், பயிர்களுக்கு பாய்ச்சப்படும் நீரை வீணாக்காது சேமிக்கமுடிவதுடன், கூடிய விளைச்சலையும் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அதிபர் திரு. சிவ முத்துலிங்கம் தெரிவித்தார்.

இந்நவீன முறைபற்றி விவசாயப் போதனாசிரியர்கள் மூலம்விவசாயிகளுக்கு கிராமம் தோறும் ஆலோசனை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சந்திரதாஸின் ஓவியக்கண்காட்சி ஜனாதிபதி திறந்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)

வாய்பேசமுடியாதவரான ஓவியர் திரு சந்திரதாஸின் ஓவியக்கண்காட்சியொன்று கொழும்பு கலாபவனத்தில் இடம் பெறவிருக்கின்றது.

இக்கண்காட்சிக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ ஏற்பாடுசெய்திருக்கிறார்.



ஓவியர் சந்திரதாஸின் ஓவியக்கண்காட்சியைத் திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சம்மதம் தெரிவித்துள்ளார்.

இவரது ஓவியக்கண்காட்சியொன்று கடந்த ஜூன் மாதம் யாழ். பொதுசன நூலகத்தில் இடம் பெற்றது.

ஓவியக்கலையின் பல்வேறு அம்சங்களிலும் மிகத்தேர்ச்சி பெற்றவரான சந்திரதாஸ் பட்டிக் ஓவியம் வரைவதிலும் திறமைபெற்று விளங்குகின்றார்.

## சிறந்த நடிகராக தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஒட்டுவெளி பராசக்தி கலைக்கழகம் நாடத்திய அகில இலங்கைத்தமிழ் நாடகப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற அரியாலை நாடக மன்றத்தினரின் ''யாருக்குக்கிரீடம்'' என்னும் சரித்திர நாடகத்தில் நடித்த எஸ். கே. ரவீந்திரன் சிறந்த நாடகநடிகராகத் தெரிவு பெற்று பரிசும் பெற்றுள்ளார்.

''யாருக்கிக் கிரீடம்'' என்னும் நாடகம் இந்த நாடகம் போட்டியில் இரண்டாம் இடத்துக்குரிய வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுள்ளது. (ஊ)

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அறிவித்தல்

சுளிபுரம் கிருஷ்ணர் கதிர்காமநாதன் —வாதி

ஈடு வழ. இல. /12182 எதிராக

யாழ்ப்பாணம் சிவன்பண்ணை றோட் 57ம் நம்பர்

1. சின்னத்தம்பி செல்லத்தம்பியும் பெண்
2. செல்லாச்சியும் —பிரதிவாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு. இல. 12182ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 8320-00 இதில் ரூபா 5700/-க்கும் 6-12-70 தொடக்கம் 13-12-71 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியுடன் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 372/50 (செலவழித்த செலவு ரூபா 263/15 நடைபெறவேண்டிய செலவு ரூபா 59/05 சமயா சமயச் செலவு ரூபா 50/30 கொடுக்கவேண்டியிருப்பதாலும் ஆனால் விற்பனையில் ரூபா 1000/ம் செலவில் ரூபா 300/ம் கழித்து மிகுதிக்கு ரூபா 12/-யும் சேர்த்து விற்பனை நடத்தப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கிழக்கிறை கழுத்தறுத்தானும் தரகன்தாழ்வும் நிலை பர. 11 5/6 குளிகளும், தரகன்தாழ்வும் கழுத்தறுத்தானும் பர. நிலை 1/2யும் இரு துண்டுகளும் கழுத்தறுத்தானும் தரகன்தாழ்வும் ஒன்று சேர்ந்து பர. நிலை 1 குளிகள் 2, 5/4ம் வீடும், குசினியும் எல்லை கிழக்கு முருகேசு நாகலிங்கத்தினதனம், வடக்கு றோட், மேற்கு நாகமுத்து சேவியரினதனம், தெற்கு மரியா. பெண் செல்லம்மாவினதனம் இதடங்கலும். யாழ்ப்பாணம் D 199/110ல் பதிவுபட்டது.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

89, முதலாம் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம் 20-7-78

0274

## லண்டனில் சாதனைபுரிந்த ஈழ மாணவன்!

லண்டன், செப். 8 ஈழத்தைச் சேர்ந்த ரேகன் ராஜசிங்கம் (13 வயது), விளையாட்டுத்துறையில் பல விருதுகளைப் பெற்று, இங்கு சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

இவரது திறமைகளை மதிப்பிட்டு, பிரபல பிரிட்டிஷ் விளையாட்டுத்துறை எழுத்தாளரான திரு. சிட்னி ஹோப் எழுதிய கட்டுரையொன்றில் ரேகன் ராஜசிங்கத்தின் சாதனைகளை வெகுவாகப் பாராட்டியுள்ளார். இக்கட்டுரை, பிரபல விளையாட்டு சஞ்சிகை ஒன்றில் வெளிவந்துள்ளது.

''அறுபது பாடசாலைகள் கலந்துகொண்ட (அகில இங்கிலாந்து ரீதியில்) ஜூடோ போட்டியில், ரேகன் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றார். லண்டன் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் ரேகன் தங்கப்பதக்கம் பெற்றார். ரெக்பை பாடசாலையில் கிரிக்கெட், பாட்மின்ரன் துறையில் சிறந்து விளையாடிய இவர், அவ்வருட விளையாட்டு வீரராகத் தெரிவுசெய்யப்பட்டார். பாடசாலை சார்பாக பல விளையாட்டுக் கோஷ்டிகளுக்குத் தலைமைவகித்தார், இவரது தலைமையில், பிரபல பாடசாலைகள் முன்னர் தட்டிக்கொண்ட விருதுகளை ரேகனின் பாடசாலை இந்த ஆண்டு பறித்துக்கொண்டு, சாதனை நிலைநாட்டியது இவைதவிர ரேகன் 100, 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும் சாதனை ஏற்படுத்தி பிரபல ''சுறே விளையாட்டு கிளப்பி''ன் அங்கத்தவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இக் கழகம் பல ஒலிம்பிக் வீரர்களை உருவாக்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கழகங்களுக்கிடையே நடைபெற்ற (இவரது வயதிற்குள்) போட்டியில் இவர் முதலிடத்தைப் பெற்றார். கிரிக்கெட்டில் பாடசாலைகளுக்கிடையேயான 'விரைவு' பந்துவீச்சு வீரராகவும், ஆல்ரவுண்டராகவும் ரேகன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 13 வயதில் இத்தனை சிறப்புப் பெறுவது அபூர்வம்'' என்று கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார்.

# காரைக் கடத்தி பஸ்ஸிலும் கொள்ளையடித்த இளைஞர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து காரைநகருக்குச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸின் கண்டக்டரிடம், பண்டத்தரிப்பில் வைத்துப் பணத்தைக் கொள்ளையடித்த துப்பாக்கி ஏந்திய ஆறு இளைஞர்கள், சுழிபுரம் வரை அதே பஸ்ஸில் சென்று, பஸ் சில்லுகளின் காற்றைத் திறந்துவிட்டதுடன், அவ்வழியே வந்த கார் ஒன்றையும் கடத்திச்சென்று, ஒழுங்கையொன்றில் அநாதரவாக விட்டுவிட்டு மாயமாக மறைந்துள்ளனர்.

இச்சம்பவம், நேற்று முன் தினமிரவு சுமார் 9-00 மணியளவில் நிகழ்ந்துள்ளது.

இது பற்றிய விபரம் வருமாறு:

காங்கேசன்துறையிலிருந்து காரைநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை (343) பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு அண்மையில், பஸ்தரிப்பு நிலையம் இல்லாத இடத்தில் மறித்த ஆறு இளைஞர்கள், துப்பாக்கிமுனையில் கண்டக்டரையும், சாரதியையும் பயமுறுத்திக் கண்டக்டரிடமிருந்து 96 ரூபாவைக் கொள்ளையடித்ததுடன், அதே பஸ்ஸில் சுழிபுரம் வரை சென்று, விக்டோரியாக் கல்லூரிக்கு அண்மையில் பஸ் சில்லுகளின் காற்றைத் திறந்துவிட்டனராம்.

பின்னர், அவ்வழியே வந்த 'வொக்ஸ்வகன்' காரை மறித்து, அதிலிருந்தவர்களைப் பயமுறுத்திக் கீழே இறக்கிவிட்டு அக்காரையும் கடத்திச் சென்றனராம்.

அடுத்து அவ்வழியே வந்த கடற்படை வீரர்களின் ஜீப்பின் உதவியுடன் காரைத் தேடியபோது, கார் சிறிது தூரத்தில் அநாதரவாக விடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கார், சங்கானைப் பொலிஸ் நிலையத்திற்குக் கடற்படையினரால் எடுத்துவரப்பட்டு, கைரேகைகள் பதிவுசெய்யப்பட்டன.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனப் ரி. ஜே. மிஸ்கின் தலைமையிலான பொலிஸ்கோஷ்டி விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (இ)

## 9 தமிழ் நூல்களுக்கு சாகித்திய மண்டலப் பரிசு!

(கொழும்பு)

ஒன்பது தமிழ் நூல்களுக்குச் சாகித்திய மண்டலப் பரிசுகள் கிடைத்துள்ளது. இந்நூல்களை எழுதியவர்களுக்கு, இம்மாதம் 10ந் தேதி ரத்கமத் தேர்தல் தொகுதியிலுள்ள மாதம்ப மகாவித்தியாலயத்தில் நடைபெறும் சாகித்திய தின விழாவில் வைத்து ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவினால் பரிசுகள் வழங்கப்படும்.

1976ம் ஆண்டு, இலங்கையில் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் தமிழ் நூல்களுக்குப் பரிசுகள் கிடைத்துள்ளன.

நாவல்கள்: போடியார் மாப்பிள்ளை (ஜோன்ராஜன்) ரூபா 500-00. புதிய தலைமுறைகள் (வை. அஹமது) ரூபா 500-00.

சிறுகதைகள்: கொன்றைப் பூக்கள் (இ. அசோகாம்பிகை) ரூபா 500-00. இவர்களும் மனிதர்கள் (திருநாவுக்கரசு) ரூபா 500-00.

கவிதை: வாழி (நீலவாணன்) ரூபா 1000-00..

வேறு நூல்கள்: கந்தபுராணச் சிந்தனைகள் (எஸ். தனபாலசிங்கம்) ரூபா 1000-00. மனம்போல் மாங்கல்யம் (ஆசிர்வாதம்) ரூபா 1000-00. கந்தபுராணச் சொற்பொழிவுகள் (தங்கம்மா அப்பாக்குட்டி) ரூபா 500-00. இந்தியச் சுதந்திரப்போரில் இலங்கை மகன் பங்கு (ராஜகோபால்) ரூபா 500-00.

## நெடுந்தீவில் ரோட்டறிக் கழக இலவச சிகிச்சை இன்று

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இலவச வைத்திய சேவைகளை மேற்கொள்ளும்பொருட்டு, யாழ்ப்பாண ரோட்டரிக்கழகத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் இன்று நெடுந்தீவுக்கு விஜயஞ்செய்கின்றனர்.

இன்றும், நாளையும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் மேற்படி இலவச வைத்திய சேவைகளை மக்களுக்கு இவர்கள் வழங்கவிருப்பதுடன், பொருளாதார அபிவிருத்திக்கான கருத்தரங்கு, சுகாதார வாழ்வு பற்றிய திரைப்படக் காட்சி ஆகியனவும் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

1974ல் நெடுந்தீவு முன்னேற்றக்கழகத்தின் அழைப்பை ஏற்று, முதன்முறையாக நெடுந்தீவில் ரோட்டரிக் கழகம் இலவச வைத்திய சேவைகளை மேற்கொண்டபோது, சுமார் 200க்கு மேற்பட்ட மக்கள் பயனடைந்தனர் என்றும் இம்முறை மிகக் கூடுதலானவர்கள் மேற்படி வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வார்களெனத் தாம் கருதுவதாகவும் தெரிவித்த நெடுந்தீவு முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு. செ. மகேசு, நெடுந்தீவு மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய சில உதவிகளைத் தாம் ரோட்டரிக் கழகத்திடம் கோரவிருப்பதாகவும் தெரிவித்தார். (கெ-இ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 6 மணிக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு யாழ்ப்பாணம், கடற்கரைவீதி ஜெயம் படிப்பகத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், செந்தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் திரு. வ, பொன்னம்பலம், திரு. ஈழவேந்தன், திரு. கோவை மகேசன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (கூ)

## வடக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஆயுதப் பொலிஸார் கடமையாற்றினர்கள். சில பஸ்களிலும் ஆயுதப் பொலிஸார் கடமையாற்றினர்கள். தூரசேவை பஸ்களும் நேற்று மாலை 6 மணியுடன் ரத்துச் செய்யப்பட்டன.

இன்றும் பஸ் சேவைகள் மாலை 6 மணியுடன் நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று பகல் வழமைபோல் பஸ்சேவை நடைபெறும். தொடர்ந்து நிலைமையை ஆராய்ந்த பின்னரே மாலை 6 மணிக்குப் பின்னரும் சேவையை நீடிப்பது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று இ, போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சு-இ)

## பஸ் தீவைப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாளை நீதிபதிமுன் ஆஜர் செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

## பஸ்களுக்கு பாதுகாப்பு

யாழ்ப்பாணத்தில் பஸ் சேவைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதுபற்றி நேற்றுபலாலி இராணுவ முகாமில் ஒரு மாநாடு நடைபெற்றது. பிரதி பொலிஸ்மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. எக்கொடப்பிட்டியா, அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ, வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரணதுங்கா மற்றும் இ:போ.ச. உயர் அதிகாரிகள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

பஸ்களுக்கும் பஸ்களில் பிரயாணம் செய்யும் பொதுமக்களுக்கும் பூரண பாதுகாப்பு அளிப்பதுபற்றி இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. இதுதொடர்பாக ஒரு நடைமுறைத்திட்டத்தை உருவாக்கும்வரையில் இன்னும் இரு தினங்களுக்கு இரவு பஸ் சேவைகளை ரத்துச்செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அல்லைப்பிட்டியில் புதிய பஸ் ஒன்று எரிக்கப்பட்டதன் காரணமாக இ. போ. ச.வுக்கு சுமார் எழுபத்தையாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த தினமான 7-ம் திகதியன்று வடபிரதேசத்தில் பஸ் எரிக்கப்பட்ட ஒரு சம்பவத்தைத் தவிர பாரதூரமான வேறு சம்பவம் எதுவும் இடம்பெறவில்லையென்று பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

1972ம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் அமுலுக்குவந்த பொழுது வடபகுதியில் இடம்பெற்ற சம்பவங்களோடு ஒப்பிடுகையில் இம்முறை பஸ் எரிப்பைத் தவிர வேறு குறிப்பிடக்கூடியதாக சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை யென்றும், பொதுமக்கள் சட்டத்தை மீறுமலும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் திரு. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. சுந்தரலிங்கம் இன்று கொழும்புதிரும்புகிறார்.

## தேவர் காலமானார்

சென்னை, செப். 8

பிரபல தென்னிந்திய சினிமாப்படத் தயாரிப்பாளரும், இயக்குநருமான திரு. எம். எம், ஏ சாண்டோ சின்னப்பதேவர் கோயம்புத்தூரில் மாரடைப்பால் காலமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 64.

சின்னப்பதேவரின் மறைவு திரைப்படத்துறைக்கு ஈடு செய்யமுடியாத இழப்புஎன்று தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ஆரும், சின்னப்பதேவரின் மறைவுகேட்டுதாம் அதிர்ச்சி அடைந்துள்ளதாக திரு. மு. கருணாநிதியும் தமது இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பக்திப் படத் தயாரிப்பதில் சாதனையேற்படுத்திய திரு. சின்னப்பாதேவர், 60க்கு மேற்பட்ட படங்களைத் தயாரித்து வெளியிட்டார். (இ)

## கண்டி - யாழ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்குபேரைத் தேடி வலை விரித்துள்ளனர்.

சுந்தரலிங்கம் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதையடுத்து மேற்படி உருத்திரபுரத்தைச் சேர்ந்த இன்னுமொரு இளைஞரும் விசாரணையின் பின் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

## இயக்கத்துக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளப்படுகிறதென் பதை நான்கூறிவைக்கவிரும்புகிறேன்

''நமது இயக்கத்தைச் சார்ந்த இளைஞர்கள், கட்டுப்பாட்டுடனும், இயக்கத்தினுடைய வேண்டுகோளுக்கு ஒப்ப, முன்பு நடந்ததுபோலத் தொடர்ந்தும் நடக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.''

## காலிமுக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி

உட்பட 22 மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலை சிறுவர்களின் அணிவகுப்பு அடுத்து, தேசியசங்கீத, நடனநிகழ்ச்சிகள் நடைபெற்றன. (ம-இ)

''புதிய அரசமைப்புச்சட்டம்

# தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது

## யாழ். கல்வி அதிபதி கருத்து

(யாழ்ப்பாணம்)

''புதிய அரசியலமைப்பு தமிழ்மக்களின் மொழிஉரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் வழங்கியுள்ளதுடன் தமிழ் தேசிய மொழியாகவும் ஆக்கப்பட்டுள்ளது''

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நடந்த சத்தியப்பிரமாண வைபவத்தில் பேசிய வடமாநில கல்வி அதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்விக் கந்தோர் உத்தியோகத்தர்கள் புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்'

திரு. மாணிக்கவாசகர் மேலும் பேசுகையில், கடந்த அரசு பறித்த உரிமைகளையும், 29ம் ஷரத்தையும் புதிய அரசியலமைப்பு தந்திருப்பதாகவும் கட்சி விட்டு கட்சி மாறுபவர்களுக்கு, தடை செய்திருப்பதாகவும் கூறினார்.

நாடு முழுவதும் தமிழுக்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாகவும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலுள்ள தமிழ்பேசும் மக்களும் புதிய சட்டத்தின்படி தமிழில் தொடர்பு கொள்ள வசதிசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தேசியகீதத்துடன் திரு. மாணிக்கவாசகர், தேசிய கொடியை ஏற்றிவைத்தார். கல்விக்கந்தோர் வளவில் ஞாபகார்த்தமாக மரங்கள் நாட்டப்பட்டன. (சு-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu, Telephone 389. Registred as a Newspaper in Srilanka.